IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO. - 56/2016

P.W.1 - சந்திரசேகரன், த/பெ.ஜெயராமன்

DATE - 18.03.2024

வா .சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

முதல் பிரதிவாதி நிறுவனம் பங்கு உரிமை நிறுவனமா என்றால் கம்பெனி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கார்ப்ரேட் நிறுவனம், அவ்வாறு முதல் பிரதிவாதி நிறுவனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து என்ன **ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் வா.சா.ஆ.19 முதல் 21 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மேற்சொன்ன ஆவணங்களில் முதல் பிரதிவாதி பற்றிய எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.21 ஆவணத்தில் நிர்வாக இயக்குனர்கள் என்று பிரதிவாதிகள் 2 மற்றும் 3 ஆகியோர்கள் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ,19 முதல் 21 வரையான ஆவணங்களை எப்போது நான் பெற்றேன் என்றால் 13.06.2022 தேதியில் பெற்றேன். வழக்கு தாக்கல் செய்த தேதியில் மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அந்த ஆவணங்களை பற்றி குறிப்பிட்டுள்ளேன். இந்த வழக்கு இல்லாமல் என்னுடைய மகள் இதே பிரதிவாதிகள் மீது ஒரு வழக்கை வேலூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது நிலுவையில்**

உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் நானும் என் மகளுக்காக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் நிலத்தின் மீது வைப்பீடு செய்வதற்கான வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள டிவிடண்ட் என்ற வார்த்தை என்ன என்றால் அந்த நிலத்தின் வைப்பீடு செய்யும் தொகையை வரும் லாபத்தை மாத மாதம் கொடுப்பது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தில் பத்திரம் யார் பெயரில் வாங்கியது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவணத்தின் பின்புறமாக மாத மாதம் டிவிடண்ட் எனக்கு எவ்வளவு கொடுத்துள்ளார்கள் என்ற விவரம் இடம் பெற்றுள்ளது என்றால் அவ்வாறு இடம் பெற்றுள்ளது. வா.சா.ஆ.16 ஆவணத்தில் 18.12.2013 முதல் 18.10.2015 வரை வரிசை எண் 1 முதல் 13 வரை குறிப்பிட்டுள்ள இடங்களுக்கு எதிராக பணத்தை பெற்றுள்ளேன் என்றால் அதில் உள்ள விவரங்களின் தான் பணத்தை பெற்றுள்ளேன். 18.12.2013 முதல் 18.10.2015 வரை எவ்வளவு லாபம் பெற்றுற்ளேன் என்றால் ரூ.11,00,000/– நான் லாபமாக பெற்றுற்ளேன். 12.10.2015 தேதி ரூ.6,00,000/– பெற்றுள்ளேன் என்றால் பெற்றுற்ளேன் ஆனால் அது ஒரு வருடத்திற்குண்டா லாபமாகும். அந்த ஒரு வருடமானது 18.09.2014 முதல் 17.09.2015 வரை ஆகும். அதே தேதியில் ரூ.4,00,000/–வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அது அசல் தொகையாகும். மீண்டும் 18.10.2015 தேதியில் ரூ.50,000/– லாபமாக கொடுத்துள்ளார்கள். அது ஒரு மாதத்திற்கான லாபமாகும். நவம்பர் 2013 முதல் 17.09.2014 வரை மாத மாதம் லாப தொகையாக பணம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட 18.11.2013 முதல் 17.09.2014 வரை நான் பெற்ற லாபங்கள்

அனைத்தும் தமிழ்நாடு மெர்கண்டல் வங்கி மற்றும் கரூர் வைஸ்யா வங்கி காசோலை மூலமாக தான் என்று சொன்னால் சரிதான். நீங்கள் பெற்றுள்ள லாபம் எதன் அடிப்படையில் என்றால் அவர்கள் வாய் மூலமாக 5 சதவீதம் கொடுப்பதாக சொன்னதன் அடிப்படையில் கணக்கு எதுவும் காட்டமாட்டேன் என்று சொன்னதன் அடிப்படையிலும் அவர்கள் கொடுத்ததை பெற்றுக் கொண்டேன். நான் மேலே கூறிய 5 சதவீத டிவிடண்ட் என்பது வா.சா.ஆ.16 ஆவணத்தில் குறிப்பிட்ட வில்லை என்று சொன்னால் சரிதான். 18.11.2013 முதல் 17.09.2014 வரை நான் 5 சதவீத டிவிடண்ட் பெறவில்லை என்று கூறி ஏதாவது பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பவில்லை ஏன் என்றால் தொடர்ச்சியாக 5 சதவீத டிவிடண்ட் பணத்தை வாங்கி வந்ததால் பிரதிவாதிகளுக்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை. வா.சா.ஆ.16 ஆவணத்தில் 18.11.2013 முதல் 17.09.2014 வரை எனக்கு கொடுக்கவேண்டிய டிவிடண்ட் கொடுத்து வந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ஆவண காலகட்டத்திற்கு பிறகு லாபத்தில் ஒரு சதவீத, அல்லது 2 அல்லது 3 சதவீதம் அல்லது 4 சதவீதம் , 5 சதவீதம் பங்கு கொடுப்பேன் என்று நீங்களும் பிரதிவாதியும் ஒரு ஒப்பந்தம் போட்டு கொண்டீர்கள் என்றால் ஏன் என்றால் அந்த ஆவணம் என்னுடைய அசல் கொடுக்க வரை செல்லதக்கது. வா.சா.ஆ–16 ஆவணத்தில் கண்டுள்ள ஜஸ்வர்யா கார்டன் பேஸ் 3, துத்தி தாங்கல் கே.வி.குப்பத்தில் அமைந்துள்ள சர்வே எண்.42/2 ஏ, 42/3 பி, 42/2 பி இடத்தை நீங்கள் பார்வை யிட்டீர்களா என்றால் பார்வையிடவில்லை. மேற்கண்ட சர்வே எண்களில் கண்டுள்ள சொத்தில் என்ன லாபம் வருகிறது உங்களுக்கு தெரியாது என்றால்

எனக்கு தெரியாது. நான் வழக்குரையுடன் தாக்கல் செய்தள்ள நாளிதழை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் 09.05.2015 தேதியன்று பிரதிவாதிகள் வீட்டு மனைகள் முதலீடு செய்ய பாட்டனர்கள் தேவை என்று விளம்பரம் இருந்தது அதனால் தான் நான் தாக்கல் செய்தேன். வா.சா.ஆ.16 ஆவணம் உங்களை பெறுத்தவரை ஒரு கடிதம் என்று சொன்னால் இல்லை அது யுனி லெட்டர் கான்டிராக்டர் ஆகும். நான் என்னுடைய வழக்கினில் லாபமாக ரூ.11,50,000/–தை அசலாக ரூ.4,00,000/–தை பிரதிவாதிகளிடம் பெற்றுக் கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்றால் கூறியுள்ளேன். அப்படி என்றால் நான் வா.சா.ஆ.16 கண்ட ரூ.10,00,000/– த்திற்கு மேல் மேற்படி லாபம் மற்றும் அசல் ரூ.15,00,000/–த்தை பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். 18.10.2015 பிறகு பிரதிவாதிகளுக்கு என்ன அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் 28.03.2014 தேதி நான் ஒரு அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பினேன். வா.சா.ஆ.9 ஆவணமானது என்ன என்றால் நான் சிவகொழுந்து என்பவருக்கு அனுப்பிய அறிப்பாகும். வா.சா.ஆ.9 ஆவணத்தில் கே.வி.குப்பம் சொத்து சம்மந்தப்பட்ட விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணத்தில் 5 சதவீத லாபம் கொடுக்க வேண்டும் என்று குறிப்புகள் உள்ளதா என்றால் அவ்வாறு குறிப்புகள் எதுவும் இல்லை.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி கோரிக்கையின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

P REVATHY

Digitally signed by P REVATHY